உ
சிவமயம்

மாவை – கொல்லங்கலட்டி கேணிக்கரை

# வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
# ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்







## சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச்
# சிறப்பு மலர்

ஸ்ரீ மன்மத வருஷம் தைதிங்கள் 10ம் நாள்
தைப்பூசத் திருநாள் – ஞாயிற்றுக்கிழமை

24-01-2016

மாவை கொல்லங் கலட்டி, கேணிக்கரை

# வீரகத்தி விநாயகர் தேவஸ்த்தானம்

## ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்



# சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்புமலர்

ஸ்ரீ மன்மத வருஷம் தைத்திங்கள் 10ம் நாள்

தைப்பூசத்திருநாள் - ஞாயிற்றுக்கிழமை

24-01-2016



வீரகத்தி விநாயகர் – மூலமூர்த்தி

உ
குகமயம்

# மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
## *MAVIDDAPURAM SRI KANTHASWAMY TEMPLE*


மஹாராஜஸ்ரீ
து.ஷ. இரத்தினசபாபதிக் குருக்கள்
ஆதீன கர்த்தா – பிரதமகுரு,
மாவையாதீனம்,
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.
ஸ்ரீலங்கா

TP: 021 3210349

Maharajasri
D.S.Ratnasabapathy Kurukkal
*Governing Authority & Chief High priest*
*Mavai Aadheenam,*
*Maviddapuram,*
*Tellippalai.*
*Sri Lanka.*


Date: 11.01.2016

வரலாற்றுத் தொன்மையுடன் கூடிய மாவிட்டபுரம் ஸ்ரீ கந்தசுவாமி கோவில் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டு 1200 வருடங்கள் பழமை வாய்ந்தும் கீரிமலை மாவிட்டபுரம் வீதி வடக்கேயும் இவ்வீதியின் இடையே தச்சங்காடு அம்பனை வீதி கொல்லங்கலட்டியூடாக செல்லும் தெரு மேற்கேயும் அம்பனை தெல்லிப்பளை செல்லும் வீதியை தெற்கேயும் தெல்லிப்பளை மாவிட்டபுரம் வீதி கிழக்கேயும் கொண்டு நடு தாயகமாக வீற்றிருந்து அடியார்களுக்கு அருள் பாலித்துக் கொண்டிருக்கும் எம்பெருமான் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்திற்கு புதியதோர் சித்திரத் தேர் தனி நபர் குடும்பத்தினரால் உருவாக்கம் பெற்று இந்நாளில் வெள்ளோட்டம் காண்கிறது. இதனையிட்டு யாம் பெருமகிழ்ச்சியடைகிறோம். தமிழும் சைவமும் தழைத்தோங்கிய தனித்துவம் மிக்க கலாசாரத்துடன் கூடிய மாவை–கொல்லங்கலட்டிப் பதிக்கு இந்நாள் உண்மையிலே ஓர் பொன்னாளாகும்.

மேலும் ஆலய வளர்ச்சியும் விழாக்களும் சிறப்பாக நடைபெறவும் எவ்வித இடையூறுமின்றிப் பக்தர்கள் தரிசனம் செய்து எல்லாம் வல்ல விநாயகப் பெருமான் திருவருள் பாலிக்க வேண்டுமாய் பிரார்த்தித்து ஆசீர் வதிக்கின்றேன்.மாவைக்கந்தனின் திருவருளுடன் யாவும் நலமாய் நடைபெறும்.

**தமிழும் சைவமும் வாழ்க வளர்க!**

*இங்ஙனம் ,*

***மஹாராஜஸ்ரீ து.ச இரத்தினசபாபதிக் குருக்கள்***

***ஆதீன கர்த்தா.***



# அனைவர்க்கும் அருளாசி வேண்டுகிறேன்

சோழ தேசத்து இராச குமாரியான மாருதப் புரவீகவல்லியால் பிரதிஸ்டை செய்யப்பட்ட விநாயகர் ஆலயங்களில் கொல்லங்கலட்டி விநாயகரும் ஒருவர் ஆவார்.

இரண்டு தசாப்த காலத்தின் பின் புனர்நிர்மாணப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுவரும் வேளையிலே அவ்வூரைச் சேர்ந்த அன்பர்கள் பலர் தாமாக முன் வந்து திருப்பணிகளைப் பொறுப்பேற்றுப் பொருளுதவி செய்யும் வகை கண்டு மனம் மிக மகிழ்கிறேன் மனதாரப் பாராட்டுகிறேன். திருப்பணி வேலைகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டிருக்கும் ஆலய திருப்பணிச் சபையினரும் பாராட்டுக்குரியவர்களே.

இத்திருப்பணிகளுக்கெல்லாம் மகுடம் வைத்தாற்போல் புதிய சித்திரதேர் ஒன்று சிறப்பாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. ஒரு தனிநபராக உபயம் செய்த அடியவரும் அழகிய முறையில் அதனை நிர்மாணித் திருக்கும் சிற்பாசாரியார் குழுவிடனரும் நீடுவாழி!

வீரகத்தி விநாயகர் தம் மெய்யடியார்கள் அன்பர்கள் அனைவருக்கும் ஐங்கரப் பெருமானது அருளாசி வேண்டி வணங்குகிறேன்.

*வேதாரணியக் குருக்கள்கனகசபைக் குருக்கள்*
கருணை வெற்றிகாட்டு விநாயகர் பிரதமகுரு
வேதாரணியஆதீனம்.



## நல்லாசி கூறி வாழ்த்துகிறேன்

மாருதப்புரவீக வல்லியால் பிரதிஷ்டை செய்யப் பெற்ற விநாயக விக்கிரகத்தை கொண்ட வரலாற்றுப் பெருமை மிக்க முதலாவது தலமாக கொல்லங்கலட்டிப் பதியில் மந்திர சிம்மாசனத்தில் எழுந்தருளி அருளாட்சி செய்து கொண்டிருப்பவர் ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமான்.

பல்லாண்டு காலமாக எமது தேசத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலை காரணமாக பின்தங்கியிருந்த நிலையை உணர்ந்து அடியவர்கள் பேருதவிகளால் திருப்பணி வேலைகள் அற்புதமாக நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் புதிய சித்திரத் தேரொன்று நிர்மாணிக்கப் பெற்று தைப்பூச நன்னாளில் வெள்ளோட்ட விழாக் காண்பதில் பெரும் மகிழ்ச்சி.

இச் சித்திரத் தேரினை ஆக்குவதற்குப் பொருளுதவி புரிந்த எம்மூர் அடியார் திரு.வி.ஹரிகரன் குடும்பத்தினருக்கு விநாயகப்பெருமான் திருவருள் கிடைக்க வாழ்த்துவதுடன் இந்தச் சித்திரத்தேரை கலை அம்சத்துடன் உருவாக்கியிருக்கும் திருநெல்வேலி 'கலை அரசு' ப. சதீஸ்வரன் ஆச்சாரியாருக்கும் அவரது குழுவினருக்கும் இத்தேர் திருப்பணி சிறப்பாக அமைய உதவிய புனருத்தாரன சபையினருக்கும் தேர்த் திருப்பணியில் ஓர் அம்சமான தேர்க்கொட்டகை (தேர்த் தரிப்பிடம்) அமைப்பித்துதவிய வேலுப்பிள்ளை வாத்தியர் வம்சாவழியினரும் மற்றும் அனைத்து அடியவர்களும் நல்வாழ்வு வாழ எல்லாம் வல்ல வீரகத்தி விநாயகப் பெருமான்-ஸ்ரீமத் சிதம்பரேஸ்வர சுவாமிகளின் பாதங்களை வணங்கிப் பிரார்த்தித்து நல்லாசி கூறி வாழ்த்துகின்றேன்.

*தேவஸ்தான சிவாச்சாரியார்*

*கணேசலிங்கம் ஐயா.*

# ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

தெல்லிப்பழை, இலங்கை

# Sri Durgadevi Devasthanam

Tellippalai, Sri Lanka

T.P. No : 021-3213151

திகதி.............................


தலைவர் :
செஞ்சொற் செல்வர்
திரு. ஆறு திருமுருகன். B.A.

உப-தலைவர் :
திரு. சி. அருளானந்தசிவம்
திரு. ச. ஆறுமுகநாதன்

பொதுச் செயலாளர் :
வைத்தியகலாநிதி
தி. திவாகரன்

இணைச் செயலாளர்கள் :
திரு. நா. தவநாதன்
திரு. மு. அருளையா

தனாதிகாரி :
திரு. அ. சண்முகநாதன்

உப-தனாதிகாரி :
திரு. சு. ஏழுர்நாயகம்




## நல்லாசிகளும் வாழ்த்துக்களும்

சரித்திரப் பிரசித்தி பெற்ற மாவை கொல்லங் கலட்டி, கேணிக்கரை வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அழகிய சித்திரத்தேர் உருவாக்கப் பட்டு வெள்ளோட்ட விழா நடைபெறுவது குறித்து மிகவும் ஆனந்த மடைகிறேன். சோழ இளவரசி மாருதப் புரவீகவல்லி ஸ்தாபித்த இத்திருக்கோவில் அருள் வளம் நிறைந்த அற்புதத் திருக்கோவில் போரின் அனர்தங்களால் பாதிக்கப்பட்ட இத்திருக்கோவிலைப் பக்தர்கள் மீளவும் கட்டிவளர்ப்பதில் மிகுந்த ஆர்வத்தோடு செயற்பட்டு வருவது பெருமைக்குரிய விடயமாகும். கொல்லங்கலட்டி மக்கள் கடவுள் பக்தியிலும், கல்வியிலும் மேலானவர்கள். நிறை செல்வத்தோடும் பரம்பரைப் பாரம்பரியத்தோடும் வாழ்ந்தவர்கள். அவர்களின் கலங்கரை விளக்கமாக வீரகத்தி விநாயகர் விளங்குகிறார்.

விநாயகப் பெருமானின் திருப்பணி வேலைகள் சமீபகாலமாக மிக வேகமாக நடைபெற்று வருவதைப் பலரும் பாராட்டுகின்றார்கள். ஆலயத்திருப்பணிச் சபையின் தொண்டு மிகவும் பாராட்டுக்குரியது. புதியதேரை உருவாக்குவதற்கு உதவிய பரோபகாரி உயர்திரு. விவேகானந்தன் ஹரிகரன் அவர்களின் பெருந் தொண்டு குறித்துப் போற்றுகின்றேன். திருத்தேரைக் கலையம்சத்துடனும், விதி நெறி களுடனும் படைத்த "சிற்பகலாமணி" திரு. பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரியார் அவர் தம் குழுவினரின் கலைப்பணி சிறக்க வாழ்த்துகிறேன். சூரிய சந்திரர் உள்ளவரை இத்தேர் நன்முறையில் பாதுகாக்கப்பட்டு, எம் பெருமான் வீதிவலம் வர வேண்டுதல் செய்து, சிறியேனது நல்லாசிகளையும், வாழ்த்துக்களையும் சமர்ப்பிக்கிறேன்.

*செஞ்சொற்செல்வர்,*

***கலாநிதீ. ஆறு. திருமுகன்.***

(தலைவர், சிவபூமி அறக்கட்டளை, இலங்கை.)

(இளைப்பாறிய அதிபர், ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.)

பிரதேச செயலகம், வலிகாமம் வடக்கு, தெல்லிப்பளை

**DIVISIONAL SECRETARIAT, VALI NORTH, TELLIPPALAI**

ප්‍රාදේශීය ලේකම් කාර්යාලය,වලිකාමම් උතුර, තෙල්ලිපලෙයි

பிரதேச செயலர் Divisional Secretary ප්‍රාදේශීය ලේකම් 021321733 | நிர்வாக உத்தியோகத்தர்/கணக்காளர் 021 2241726 Accountant පරිපාලන නිලධාරී 021 2241723 | உதவித் திட்டமிடல் பணிப்பாளர் Assistant Director of Planning ගණකාධිකාරී සහකාර සැලසුම් 021 41722

அலுவலகம் Office කාර්යාලය 021 2241726 தொலைநகல் Fax ෆැක්ස් අංකය 021 2241726 மின்னஞ்சல் Email ඊ-මේල් dstellippalai.@prc.sltnet.lk


எனது இல My No මගේ අංකය DS/VN/Cul/Greeting/01 | உமது இல Youe No ඔබේ අංකය | திகதி Dat දිනය 20.01.2015

## ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
## புதிய சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா–
## பிரதேச செயலாளரின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித் திருநாட்டின் வடபால் சைவமும் தமிழும் செழித்தோங்கும் மாவை– கொல்லங்கலட்டிப் பதியில் இருந்து அருளாட்சி புரிந்துகொண்டிருக்கும் ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்றைய தினம் 2016.01.24ஆம் திகதி தைப்பூச நன்நாளில் இடம்பெறுவதையிட்டு பெரு மகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தின் நிலைக்களன்களாக விளங்கும் ஆலயங்கள் எங்கெல்லாம் சிறப்பாக இலங்குகின்றனவோ அங்கெல்லாம் ஆன்மீகம் குடிகொண்டு சிறந்த நிலைபேறுடைய பதிகளாக மிளிர்வதைக் காணலாம். சுவாலித்து எரியும் அக்கினியின் தோற்றத்தில் அமைக்கப்பெற்ற தேரானது அழித்தலைக் குறிப்பது. ஆன்மாக்களைப் பீடித்திருக்கும் ஆணவம், கன்மம், மாயை என்று சொல்லப் படுகின்ற மும்மலங்களையும் பக்குவப்படுத்தும் வெளிப்படையைத் தேர் உற்சவம் மூலம் நாம் உணர்ந்து கொள்ளலாம்.

தேரின் பாகங்கள் பிரபஞ்சத் தோற்றத்தையும் அதன் பீடம் இருதயத்தையும் குறிப்பன. மேலே கோபுரம் போல் குவிந்து செல்லும் தேர்க் கலச முடிவில் குடை நிழல் தெரிகின்றது. மனம் குவிந்து மேலான சிந்தனைகளுடன் இறைவனைத் தியானித்தால் அவனது அருட்குடை நிழல் நம்மைத் துயர வெளியிலிருந்து பாதுகாக்கும் என்ற அரிய தத்துவத்தை தேர்த் தத்துவம் உணர்த்துகின்றது.

ஊர்கூடித் தேர் இழுக்கின்ற பெரும்பக்குவத்தை விநாயகர் எமக்களித்து அருள் பாலித்திருக்கின்றார். இன்று மிளிரும் புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறப்புற அமைய எல்லாம் வல்ல விநாயகப் பெருமானை இறைஞ்சுகின்றேன். புதிய சித்திரத்தேர் உருவாக்கத்தில் முன்னின்றுழைத்த அத்தனை உள்ளங் களுக்கும் எனது இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்து நிறைவு செய்கின்றேன்.

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்!

*க. ஸ்ரீமோகனன்*
*பிரதேச செயலாளர், வலி வடக்கு – தெல்லிப்பளை*



## வேழமுகன் திருத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறக்க வாழ்த்துகின்றேன்.

அருள்மிகு கொல்லங்கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகப் பெருமானுக்கு அமைந்த திருத்தேர் வெள்ளோட்ட விழாவினை எண்ணி அகம் மிக மகிழ்ந்து வணங்குகிறேன். எங்களூரின் எழிலுக்கும் அதன் செழிப்புக்கும் காரணனாக விளங்குபவர் விநாயகனே ஆவார். "கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்" என எங்கள் மூதாட்டியும் கூறியுள்ளார்.

கி.பி 7ம் நூற்றாண்டின் இறுதியில் ஈழம் வந்த சோழ நாட்டு இராஜ குமாரியான மாருதப் புரவீக வல்லி தனக்குற்ற குன்மபிணி தீர்த்த பெருமான் மாவைக் கந்தனுக்கு ஆலயம் அமைத்த பின்னரும் தன் முகத்தில் அந்நோயின் வடுக்கள் இருப்பதைக் கண்டு திகைத்தாள். அதனாலேயே தன்குருவாம் சாந்த லிங்க முனிவரின் ஆலோசனைப்படி ஏழு இடங்களில் விநாயகர் சிலைகளை ஸ்தாபித்தாள் என்பர்.

அவ்விதம் முதன்முதல் வைக்கப்பட்டதாகிய பெருமை பெறுகின்றது கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்.எமது ஆலயத்தில் மகோற்சவ காலத்தில் எம்பெருமான் எழுந்தருளத் திருத்தேர் இல்லாக் குறையும் இன்றே நீங்கிட நன்றே அமைந்த சிற்ப சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா இன்று நிகழ்வதை இட்டு மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அருளுதவியாய் ஐங்கரப் பெருமான் ஆசி வழங்க இப்புண்ணிய பூமியிலே பொருளுதவி செய்யும் அடியவர்களும் போற்றுதற்குரியவர்கள். அதனோடு இணைந்து இத்திருத்தலத்தின் திருப்பணிகளிற்காய் சபை அமைத்து எனக்குப் பக்க பலமாக இருந்து அரும்பணியாற்றி வரும் அன்பர்கள் அனைவருக்கும் என் உள்ளத்தால், உணர்வால் நன்றி பகர்கிறேன்.

சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறக்க எம்பெருமான் திருவடி மலரினைப் பணிந்து வணங்கி வாழ்த்துகிறேன்.

*க.துரைசிங்கம்*
தலைவர்,
ஆலய புனருத்தாரண சபை.



விநாயகர் சந்நிதானம்



சிதம்பரேஸ்வரர் சந்நிதானம்



சந்தானகோபாலர், கஜலக்ஷ்மி, நாகதம்பிரான்



வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியர்

# ஆலயத் திருப்பணிச் சபையினர்



டாக்டர். பொ.மகாதேவன் (உப தலைவர்), திருமதி. சாவித்திரிதேவி குகநேசன்(உப செயலாளர்),
திரு. க. துரைசிங்கம் (தலைவர்) திருமதி. அன்னபரிபூரணம் ஞானேஸ்வரன் (செயலாளர்)
திரு. சி. பகீதரன் (பொருளாளர்)

திரு. செ.வில்வராசா, திரு. வே.விஷ்ணு, திரு. கு.புரந்தரன் (சட்டத்தரணி - போசகர்),
திரு. சு. கமலநாதன், திரு. சி. பாஸ்கரலிங்கம்

# கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரன சபையினரின் செய்தி

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய புனருத்தாரன சபை காலஞ் சென்ற சிவஸ்ரீ.சிவசண்முகானந்தக் குருக்கள் அவர்களால் நிறுவப்பெற்றும், அவர் மறைவின் பின்னர் இரண்டு ஆண்டுகள் நிறைவெய்தி இப்போது தனது மூன்றாவது ஆண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்றது. இவ் வேளையில் எமது சபையானது அடியார்களது பொருளாதார உதவிகளைப் பெற்று திருப்பணி வேலைகளில் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டுக் கொண்டிருப்பது விநாயகனின் அருட்செயலே.

அருளுடைய விநாயகப் பெருமானின் திருவருளினால் வீரகத்தி நாயகரது கோவில் திருப்பணி வேலைகள் யாவற்றையும் இனிதுற நிறைவேற்ற வேண்டும் என்று சிந்தித்துக் கொண்டிருக்கும் வேளையில் தேர்த் திருப்பணி விடயமாக சபையினரால் நிதி திரட்டுவது பற்றி ஆராயப்பட்டது. இந்நிலையில் பிரான்ஸில் வாழும் எம் ஊரைச் சேர்ந்த திரு.விவேகானந்தன்ஹரிகரன் என்ற சமூக சேவையாளன் சித்திரத்தேர் அமைப்பதற்கான முழுச் செலவையும் தாமே தருவதாக பொறுப்பேற்றுக் கொண்டமை எமது சபைக்குப் பெரு மகிழ்வைத் தந்தது. 1965ம் ஆண்டு வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் முதலாவது தேர்த் திருப்பணிச் சபை காலஞ் சென்ற திரு. வ. சரவணமுத்து (J.P) தலைமையில் ஆரம் பிக்கப்பட்டது. அச் சபையினர் பல்வேறு சிரமங்கள் மத்தியில் நிதி திரட்டி முதலாவது தேரை உருவாக்கினர் என அறிகிறோம். இந்நிலையில் இன்று எந்தவித சிரமமுமின்றி தேருக்கான நிதியை தாமே முன் வந்து தரும் திரு.வி.ஹரிகரனது கைங்கரியம் விநாயகரின் அருட் செயல் என்றே கூற வேண்டும்.

அடுத்து, தேரை சிறந்த முறையில் பாதுகாப்பதற்கான தேர்த் தரிப்பிடம் (கொட்டகை) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. இதனை செப்பனிட்டு உதவுவதற்கு எமது சபையினர் கொல்லங்கலட்டி வேலுப்பிள்ளை உபாத்தியாயர் குடும்பத்தினரை நாடிய போது அவர்களும் தேர் தரிப்பிடத் திருப்பணியை நிறைவேற்றியிருப்பது பாராட்டு தற்குரிதாகும்.

மேலும் ஆலயத்தை புனருத்தாரணம் செய்வதற்கு நிதி உதவிகளையும் பொருளுதவிகளையும் பல அடியார்கள் முன்வந்து அளித்தமையால் பிள்ளையார் முகப்பு, சிவன் முகப்பு - முன் மண்டபங்களையும் அமைக்க முடிந்தது.

சந்தான கோபாலர், மகாலட்சுமி, நாகதம்பிரான்,பழனியாண்டவர் ஆகிய பரிவார தெய்வங்களுக்கான மண்டபங்களையும் யாகசாலையையும் அழகுற அமைத்து ஆலயத்தை பழைய வடிவிற்கே கொண்டு வந்துள்ளதுடன் வள்ளி தெய்வானை சமேத சுப்பிரமணியருக்குப் புதிதாகப் பரிவாரக் கோவில் அமைத்து கும்பாபிஷேகமும் செய்வித்திருக்கின்றமை எமது புனருத்தாரன சபையினதும் மக்களினதும் ஒத்துழைப்பையும் முயற்சியையும் எடுத்துக் காட்டுகின்றது எனலாம்.

இவ்விடத்தில் ஆலயத்தை புனருத்தாரணம் செய்ய உதவிய பெயர் குறிப்பிட விரும்பாத உறவுகள் அத்தனை பேரும் பாராட்டிற்குரியவர்களே.

ஈழத்தின் சிரசாய் விளங்கும் யாழ்ப்பாணத்தில் கொல்லங்கலட்டி எனும் பதியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் வீரகத்திப் பிள்ளையார் கோவில் வரலாறு, விநாயகர் வழிபாட்டின் முக்கியத்துவம் திருப்பணிபற்றிய வாழ்த்துரைகள் என்பன பற்றி அறிஞர்கள் எழுதியுள்ள கட்டுரைகள் அடங்கிய இச் சிறப்பு மலரை மிகவும் மகிழ்ச்சியுடன் வெளியிடுவது எமக்குப் பெருமை தருகின்றது.

எமது புனருத்தாண சபை ஒன்று கூடி உழைத்து திருப்பணிச் செயற்பாடுகளான நிதியை திரட்டுவதற்கு உதவி புரிந்த அத்தனை நல்லுள்ளங்களுக்கும் நன்றி கூறக்கடமைப் பட்டுள்ளோம்.

மேலும் 2016.01.24 ஆம் நாளாகிய இன்று தைப்பூசத் திருநாளில் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெறும் வேளையில் அனைவர்க்கும் திருவருள் கூடவேண்டி விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

*புனருத்தாரண சபையினர்*
வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம்
கொல்லங்கலட்டி .



**அருள் நிறையும் ஐங்கரத்தான் ஆசி கூடி**
**அவனிதனில் அடியார்கள் அனைவர் வாழி!**

பொன்றாப் புகழ் பூத்த புகழ் ஈழத் தமிழ் நாட்டில்
குன்றேத்து தீபமதாய் குவலயத்தில் ஒளி மிளிர
எத்திசையும் போற்றும் எழில்பொழியும் மாவை-கொல்லங்கலட்டிப்பதி வித்தகனாம் வீரகத்தி நாயகருக்கு அழகிய சித்திரத்தேர் சிறப்புற அமைந்தமை கண்டு அகம் மிக மகிழ்கின்றது.

மாமேவு பவளத்தாற் கால்களாக்கி
மணிவைர ரத்தினத்தால் விட்டம் பூட்டி
பூமேவு தங்கமணிப் பலகை தேக்கி
பூவேறு சித்திரங்கள் பொழியச் செய்த

சித்திரத்தேர் வடம் பிடித்து இழுத்து வர அத்திமுகத்தையனவன் அருள் கிடைக்கப் பெற்றிருப்பது இத்தருணத்தில் அடியார்கள் பெற்ற வரமேயாகும். ஆயினும் ஊர் சிறக்க உத்தமனாம் அவர் கிருபை இன்னும் எத்தனையோ வேண்டும்.

திருப்பணிச் சபையில் சில மாதரும் இணைந்து அரும்பணி ஆற்றிவரும் நிலையில் அன்பர்கள் மனமுவந்து அளித்துவரும் பொருளுதவி முதலான நிலைபெறுநற் கைங்கரியம் நீடு வாழி!

சகல விதமான கோவில் நிகழ்வுகளிலும் சளைக்காது பணிசெய்தும் இளையோரில் ஒருவனாம் என் இதயத்து சோதரன் விஷ்ணுவிற்கும் இன் தமிழால் நன்றி.

அருள் நிறையும் ஐங்கரத்தான் ஆலயத்து அரும்பணிகள் சிறப்பாகத் தொடர்ந்து நிறைவேறவும் அடியவர்கள் அன்பர்கள் அனைவர்க்கும் விநாயகப் பெருமான்- சிதம்பரேஸ்வரர் திருவருள் கிடைக்க வேண்டியும் வணங்குகிறேன்.

*கு. புரந்தரன்*
சட்டத்தரணி
போசகர்- ஆலயப் புனருத்தாரண சபை.

# கிரமசேவகரின் வாழ்த்துரை

"ஆலயந் தானும் அரன் எனத் தொழுவோம்"

என்கின்றது சிவஞானபோதம். இந்த உண்மை சைவ மக்களுடைய வாழ்விலே நன்கு பிரபாலித்துள்ளது. வலிவடக்கில் சிறியளவும் பெரியளவுமாகக் காட்சி தருகின்ற எத்தனையோ ஆலயங்கள் இன்று புனருத்தாரணம் செய்யப்பட்டு வருகின்றன. அந்த வகையில் மாவிட்டபுரம் தெற்கிலே அமைந்த கொல்லங் கலட்டி வீரகத்தி விநாயகர் ஆலய மகிமையை நாம் இத்தருணத்தில் குறிப்பிடுதல் சாலச் சிறந்தது.

கல்வி மான்களும் உழைப்பாளிகளும் கடவுள் நம்பிக்கை கொண்டவர்களும் வாழ்ந்து வருகின்ற இக்கிராமத்தில் கோயில் கொண்டு நல்லருள் பாலிக்கும் விநாயகப் பெருமானின் திருவருட்கடாட்சத்தின் பேறாய் நடைபெறும் தேரோட்டத்தின் பொருட்டு வெளியிடப்படும் இச் சிறப்பு மலர்ப் பொலிவு கண்டு மகிழ்வுறும் பிரசைகளில் நானும் ஒருவர்.

காலத்தின் தேவையெனக் கருத்தினில் இருத்தி இந்த நற்பணியை மேற்கொள்ளும் ஆலய திருப்பணிச் சபையினரதும் மலர் வெளியீட்டுக் குழுவினரதும் முயற்சி பாராட்டுக்குரியது. அத்துடன் இந்நூல் எமது வருங்கால சந்ததியினருக்கும் பயன் பெறக் கூடிய நூலாக மலரும் என்பதில் ஐயமில்லை. இவ்வெளியீடு ஆன்மீக ஒளியும் பக்தி மணமும் வீசி சிறப்புற விநாயகர் திருவருள் கிடைக்க வேண்டும் எனவும் இவர்களின் இப்பணி தொடர வேண்டுமெனவும் மனப்பூர்வமாக வாழ்த்துகின்றேன்.

***இவ்வண்ணம்,***

***திருமதி . சசிகலா ஜெயவிந்தன்***

கிராம உத்தியோகத்தர் J/232



## தேர் உபயகாரரின் உள்ளத்திலிருந்து...



சித்திரத் தேரோட சிறப்புக்கள்

பெருகட்டும் !

எமது பரம்பரை இஷ்ட தெய்வமாகிய வீரகத்திப் பிள்ளையாரின் சித்திரத்தேர் வெள்ளோட்ட விழாச் சிறப்புமலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்க எனக்கு வாய்ப்புக் கிட்டியதை எண்ண உள்ளம் பூரிக்கின்றது.

நாம் வாழ்ந்த ஊர் எம்மோடு வாழ்ந்த மக்கள் எல்லோருமே எம் வாழ்வின் உயர்ச்சியின் வழியமைந்தவர்கள். வீரகத்தி பிள்ளையார் கோயில் எமது பரம்பரை வழிபாட்டுத்தலம். அங்கேதான் ஏடு தொடக்கி எம் எல்லோருக்கும் அறிவுக்கு வித்திடப்பட்டது. அந்த அத்திவாரமே நான் என்று வாழாது நாம் என்று வாழ எம் பொதுவாழ்விற்கும் வழிசமைத்தது. வீரகத்திப் பிள்ளையார் எம் வாழ்விற்கு வழிகாட்டி, எம்மைக் காத்தருளும் குலதெய்வம்.

அந்த நன்றியின் பிரகாரம், வீரகத்தி பிள்ளையாருக்கு சித்திரத்தேர் செய்து அழகு பார்க்க எமது பரம்பரையினர் சார்பாக எனக்குச் சந்தர்ப்பம் கிட்டியது பிள்ளையாரின் கிருபை தான். இத்தருணத்தில் காலஞ் சென்ற எனது தந்தையார் சங்கரப்பிளளை விவேகானந்தன் அவர்களது ஞாபகார்த்தமாக இச்சித்திரத் தேரைப் பிள்ளையாருக்கு சமர்ப்பிப்பதில் ஆத்ம திருப்தி அடைகிறேன்.

இன்னும், எமது கொல்லங்கலட்டி ஊர் மேலும் சிறக்க எல்லாம் வல்ல வீரகத்தி பிள்ளையார் அருள்பாலிக்க வேண்டுமென அவரது பாதார விந்தங்களை இறைஞ்சுகின்றேன்.

எம்மூர் மக்களும் கல்வி எனும் கடலிலே நீந்திக் கரைசேரவேண்டும். வாழ்வின் சகல சௌபாக்கியங்களையும் அவர்களும் அடையவேண்டும். எமது ஊர் மீண்டும் புதுப்பொலிவுடன் மிளிரவேண்டும். இதற்கு உலக மெல்லாம் புலம்பெயர்ந்து வாழும் கொல்லங்கலட்டி ஊர் மக்கள் அனைவரும் கரம்கோர்த்து உதவவேண்டுமென சித்திரத்தேர் வெள்ளோட்டம் நிகழும் இத்தைப்பூச நன்நாளில் அனைவரையும் அன்பாக வேண்டுகிறேன்.

ஊர் கூடிவடம்பிடிக்க தேர் அசையும் !

*எஸ். வி. ஹரிகரன்*

தொழிலதிபர்.

தலைவர், மகாஜனக்கல்லூரி பழைய மாணவர் சங்கம். பிரான்ஸ்

# வீரகத்தி விநாயகர் ஆலயத் தேர்க் கொட்டகை

நமது நாட்டில் நடந்து முடிந்த போரின் பின் கோவில்கள், பாடசாலைகள் மற்றும் ஊர்கள் என அநேகமாக எல்லாமே புனருத்தாணம் செய்து வருவதை எம்மால் காணக் கூடியதாகவுள்ளது. அந்த வகையில் மாவை கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகரின் ஆலயமும் புனருத்தாண சபை அமைத்து அதனூடாகப் பல திருப்பணிகளை செய்து வருவது மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். அந்த வகையில் பிள்ளையாரின் தேர்க்கொட்டகை நிறுவுவதற்காக கோவிலின் அருகே அமைந்துள்ள சைவவித்தியாசாலையை நிறுவியரான திரு. ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் நினைவாக, அன்னாரின் வம்ச வழியான எமக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இது நாம் செய்த புண்ணியம் என நினைக்கின்றோம். இப் பெரும் முயற்சி தைப்பூசத் திருநாள் ஆகிய 24.01.2016 இல் நிறைவேறுவது மேலும் ஒரு மெருகூட்டும் சிறப்பம்சமாகும்.

அமரர் ஆ. வேலுப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களால் 1872ம் ஆண்டு சைவ வித்தியாசாலை நிறுவப்பட்டது. நிறுவிய நாளில் இருந்தே அப்பாடசாலைக்கும், கோவிலுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தியிருந்தார். இதற்கு உதாரணமாக ஆலய நவராத்திரி பூஜை, விஜயதசமி போன்றவைகள் பாடசாலை உபயமாக பல ஆண்டு காலமாக இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இரண்டாம் உலகப் போரின் பின்னர் பெரும் பஞ்சம் நிலவிய போது அமரர் ஆ.வேலுப்பிள்ளை உபாத்தியாயர் படகு மூலம் இந்தியா சென்று அரிசி முதலான பொருட்களைக் கொண்டு வந்து அமுது செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்து நித்திய பூஜைகள், கிரியைகள் எதுவித தடையுமின்றி நடைபெற உதவினார்.

நாமும் அன்னார் வழி நின்று எம்மால் முடிந்தவரை அவர் விட்டுச் சென்ற பணியினைத் தொடர எல்லாம் வல்ல விநாயகர் அருள் புரிவாராக. மேலும் அன்னார் நினைவாக இத்தேர்க் கொட்டகை அமைப்பதற்கு சந்தர்ப்பம் கொடுத்தும் மிகுந்த ஒத்துழைப்பும் வழங்கிய கோவில் புனருத்தாரண சபையினருக்கு எமது நன்றியினைக் கூறுவதுடன் இவ்வூர் மக்கள் மேலும் மேலும் சிறப்புடன் வாழ வீரகத்திப் பெருமான் அருள் புரிய வேண்டுகின்றோம்.

*திரு. சி. கமலக்கண்ணன்* (பேரன்), *திரு. ந. இன்பராஜ்* (பூட்டன்),
*திரு. இ. ஜெயசிங்கராஜா* (பூட்டன்), *திரு. க. காங்கேயன்* (பூட்டன்).



சித்திரத்தேர் தேர்க்கொட்டகை ஆகியவற்றின்
திருப்பணிவேலைகள் நடைபெறும் வேளை...

ஓம் விராட் விஸ்வப் பிரமனே நமஹ

# Thanusha Sitpalayam

# தனுஷா சிற்பாலயம்

பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரி

அம்மன் வீதி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.
திகதி : ..............................



வரலாற்றுச் சிறப்பு மிக்க மாவை- கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகருக்கு சித்திரத்தேர் நிர்மாணத்திற்கு வாய்ப்புக் கிடைத்தமை என் வாழ்வின் வாழ்வில் ஒரு பாக்கியமாகவே கருதுகிறேன்.

எனது குருநாதராகிய திருநெல்வேலி சற்குருநாதன் அவர்கள் இத்தருணம் மனதில் நிறுத்தி நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

சித்திரத்தேர் நிர்மாணத்திற்கான பரிமாணம் நிர்ணயம் செய்யப்பட்ட நாள் முதல் இக்கலைப் பணியாம் திருப்பணி நிறைவு தினம் வரை ஏறக்குறைய பதினாறு மாதங்கள் உதவி ஒத்தாசைகள் வழங்கியும், வழிகாட்டிலும் தோழமையுடன் பழகி வந்த ஆலய சிவாச்சாரியார், புனருத்தாரனசபையினர், ஊர் மக்கள், இளைஞர்கள் அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகள் உரித்தாகட்டும்.

இதற்கும் அப்பால் வெளிநாட்டிலிருந்து கொண்டு தான் பிறந்த ஊர் ஆலயத்திற்கு இப்பெரும் பணியை மேற்கொண்ட திரு.வி.ஹரிகரன் அவர்கக்கும் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

இரவி பகல், மழை, வெயில் என்று பாராது இத்திருப்பணியில் தம் கரம்கோர்த்து உரிய நேரத்தில் வெள்ளோட்ட விழாச் சிறக்க பணியாற்றியுதவிய எனது குழுவினருக்கு என் மனத்தால் மிகப் பணிந்து நன்றி கூறுகிறேன்.

சித்திரத்தேர் சிறப்பாய் அமைய அருளீந்த விநாயகர் அருள் அனைவருக்கும் கிடைக்க வேண்டிப் பிரார்த்திக்கிறேன்.

வணக்கம்

சிற்பகலாமணி

*பரஞ்சோதி சதீஸ்வரன் ஆச்சாரியார்.*



## ஊரவர் என்னும் வகையில் உவகையடைகின்றோம்

கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகருக்கு மூர்த்தி, தலம், தீர்த்தம், விருட்சம் முதலான சிறப்புக்களுக்கு மேலதிகமாக தென்கிழக்கு மூலையிலே சைவத்தமிழ் வித்தியாசாலையும் அமையப் பெற்றிருப்பது விசேட அம்சமாகும்.

கல்வி, ஒழுக்கம், ஆன்மீகம் முதலான விழுமியங்களைக் கொண்ட எமது சமுதாயம் உள்நாட்டுப் போர்ச் சூழல் காரணமாக பாதிப்படைந்திருந்த நிலை யிலிருந்து மீண்டு வருவதுடன் அபிவிருத்தி, மீள்நிர்மாண நடவடிக்கைகள் மேலோங்கி வருவது ஊரவர் எனும் வகையில் எமக்கு உவகையளிக்கிறது.

அவ்வகையிலே விநாயகருக்கு சித்திரத்தேர் அமைத்து வெள்ளோட்ட விழா நடைபெறும் இந்நாளில் எம்பெருமான் அருள் எம்மனைவருக்கும் கிடைக்க வேண்டுவதுடன் இத்திருப்பணி வேலைகளுக்காக அயராது உழைக்கும் ஆலய புனருத்தாரண சபையினர், நிதி உதவி செய்து வருகின்ற பெரியோர்கள் மற்றும் தொண்டுகள் புரிந்து வரும் எம்மூர் இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரையான அனைவருக்கும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்வதில் பெரும் மகிழ்ச்சியடைகின்றோம்.

***சி. கமலக்கண்ணன்***
தலைவர்,
கொல்லங்கலட்டி மக்கள் ஒன்றியம்,
பிரித்தானியா.

# மாவை கொல்லங்கலட்டி
# ஸ்ரீவீரகத்திப் பிள்ளையார் கோவில்
# வரலாறும் வளர்ச்சியும்

சைவமும்தமிழும் தழைத்தோங்கி நிற்கும் இலங்காபுரியின் வடபால் அமைந்துள்ள யாழ்ப்பாணத்தில் தலைசிறந்த பதியாகிய மாவிட்டபுரத்தில் 8ம் நூற்றாண்டில் சோழராச குமாரத்தியாகிய மாருதப்புரவீக வல்லியின் குன்ம நோயும் குதிரைமுகம் கந்தசாமியாரை பிரதிஷ்டை செய்து பிறர் பார்வைக்கு மாறியும் சொந்தப் பார்வைக்கு மாறாமலும் இருந்ததைச் சிந்தித்து உணர்ந்து ஏழு இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய்வதாக நேர்த்திக்கடன் செய்து முதலாவதாகக் கொல்லங்கலட்டி வீரகத்தி விநாயகரையும், பன்னாலை, அளகொல்லை, கும்பளாவளை, பெருமாக்கடவை, ஈலங்குளாய், கல்வளை ஆகிய இடங்களில் விநாயகப் பிரதிஷ்டை செய்வித்ததின் பயனாகக் குன்ம நோயும் குதிரை முகமும் நீங்கியதென்பது வரலாறு.

கொல்லங்கலட்டியில் தற்போதுள்ள கேணிக்கு முன்பாக இருந்த ஆலமரத்தின் கீழ் விக்கிரகம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. மழை, வெயில் முதலியன பட்டதால் இவ்விக்கிரத்தை அயலில் உள்ள வீட்டில் வசித்து வந்த திரு. பூ.குமாரவேலு என்பவர் தமது வீட்டில் ஒரு பகுதியில் வைத்து அவரும் பிறரும் வழிபட்டு வந்தனர். இப்படிப் பலரும் வழிபட்டு வந்தாலும், ஆசௌச காலங்களில் பூசை செய்ய முடியாதிருந்ததாலும், பூஞ்சோலைக்கு மேற்கே மண்ணினால் ஆலயமைத்து வழிபட்டு வந்தனர். திரு.பூ.குமாரவேலு என்பவர் சிவபதமடைய அவர் மகனாகிய திரு.கு.பொன்னம்பலம் என்பவரும் தந்தையார் செய்து வந்த கைங்கரியங்களைச் சிறிதும் குறைவின்றிச் செய்து வந்தார். இவர் இருக்கும் போதே இவரது மகன் சிவஸ்ரீ. பொ.அம்பலவாணக்குருக்கள் அவர்கள் சிவாகம விதிப்படி கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம், மகாமண்டபம், நிருத்தமண்டபம், ஸ்தம்பமண்டபம், மடைப்பள்ளி முதலியவற்றை அமைக்க விரும்பி அயலிலுள்ள காணியைத் தர்மசாதனம் செய்வித்தும் விலைக்கு வாங்கியும் ஆலயத்தை விதிப்படி சுண்ணாம்பினால் தற்போதுள்ள இடத்தில் அமைத்து 1872ஆம் ஆண்டு வைகாசி மீ அத்த நட்சத்திரத்தில் மகாகும்பாபிஷேகம் செய்வித்தார். அன்று தொடக்கம் அலங்கார உற்சவம் நடைபெற்று வந்ததுடன் நவராத்திரி, திருவெம்பாவை, சிவராத்திரி முதலிய காலங்களில் விசேட அபிஷேக ஆராதனைகளையும் செய்ய வேண்டிய கிரியைகளையும் செய்து வந்தார்.

தற்போதுள்ளபடி சுற்றுமதில் கட்டத் தீர்மானித்தும் பணவசதியில்லாத படியால் அதற்கு நிலையமிட்டு வைத்தார். 1896ல் அகாலமடைந்ததால் கட்டப்படவில்லை. சில மாதத்தில் ஸ்தம்ப மண்டபம் புயல் காற்றினால் சேதமாகியதால் திருவிழாக்கள் ஸ்தம்பித்தது. ஆனால் நித்திய பூசைகள் கிரமமாக நடைபெற்றுவந்தன.

அதன்பின் 1896ம் ஆண்டு அவரது மகன் திரு .அ. பொன்னையா தேசிகர் அவர்கள் நிர்வாகப் பொறுப்பபையும் குடும்பப் பொறுப்பையும் ஏற்று நடாத்தி வந்தார். தந்தையார் இறந்த சில வருடங்களில் அயலவர் பலர் வற்புறுத்தியதனால் கோவிலை ஆடு, மாடுகள் அசுத்தப்படுத்தாமல் சுற்றுமதிலைத் தந்தையார் தீர்மானித்தபடி உருவாக்கினார். அத்தோடு தற்போதுள்ள சிறிய எழுந்தருளி விநாயக விக்கிரகத்தையும் கும்பாபிஷேகம் செய்வித்தார்.

1925ஆம் ஆண்டு திருடர்கள் மூலஸ்தான விக்கிரகத்தைப் புரட்டி ஆதார சிலையில் வைக்கப்பட்டிருந்த தங்க யந்திரத்தைக் களவாடியதால் விக்கிரகம் பாலஸ்தாபனம் செய்து ஆலய விமானத்துக்கு வர்ணம் வைத்து பழுதுகளைத் திருத்தி சில மாதத்தின் பின் 1926ஆம் ஆண்டு ஆனி மீ அனுஷ நட்சத்திரத்தில் மகா கும்பாபிஷேகம் செய்வித்து தந்தையாரினால் நடத்தப்பெற்ற அலங்கார உற்சவத்தையும், சிவராத்திரி, திருவெம்பாவை, பிள்ளையார் கதை, விநாயகர் சதுர்த்தி முதலிய புண்ணிய காலத்தில் அபிஷேக ஆராதனைகளையும் மற்றும் செய்ய வேண்டிய கைங்கரியங்களைச் செய்தும் விசேடமாகச் செய்ய வேண்டிய கிரியைகளையும் செய்வித்து வந்தார்.

இதன்பின் கோபுரம், யாகசாலை, வசந்தமண்டபத்தைக் கட்டி, கொடிமரம் நாட்டி 1929ம் ஆண்டு கொடியேற்றத் திருவிழாவைத் தொடக்கமாகக் கொண்டு மகோற்சவம் நடைபெற்று வந்தது. பின் பரிவார மூர்த்திகளும் பிரதிஷ்டை செய்யப்பட்டன.

மூலஸ்தானம் பழுதுற்றிருந்ததால் அதை இடித்து வைரக்கல்லினால் கர்ப்பக்கிரகம், அர்த்தமண்டபம் அமைத்து 1941ம் ஆண்டு பங்குனி மீ அத்த நட்சத்திரத்தில் மூலமூர்த்திக்கும் ஏனைய மூர்த்திகளுக்கும் கும்பாபிஷேகம் நடைபெற்றது. இதன்பின் செய்ய வேண்டிய திருப்பணிகளைச் செய்து தேர் முட்டி மண்டபத்தையும் கட்டிக் குறையில் இன்றும் உள்ளது. தேர்த்திருப்பணியும் சில்லுகள் அச்சுக்கள் செய்வித்தபின் ஸ்தம்பித்தது.

மேலும் சுருங்கக் கூறின் இவரது பெரு முயற்சியால் சிறியதாக விரிந்த கோயில் சுற்றுமதில், வசந்த மண்டபம், யாக மண்டபம், ஸ்தம்ப மண்டபம், கோபுரம், வசந்த மண்டப வாயில், மடைப்பள்ளிவாயில் மண்டபங்களை அமைத்து ஓர் பெரிய ஆலயமாக நிர்வகித்து 1958ம் ஆண்டு மார்கழி மாதம் அமரத்துவம் அடைந்தார். இவர் புகழ் என்றும் அழியாது நிலைத்திருக்கும் என்பதில் சற்றேனும் சந்தேகமில்லை.

பின்பு நிர்வாகப் பொறுப்பையேற்ற அன்னவர் புத்திரன் ஸ்ரீலஸ்ரீ பொன். அம்பலவாணக்குருக்கள் தந்தையாரால் செய்யப்பட்ட கட்டிடங்களைப் பழுது பார்த்துத் திருத்தி வந்தார். இலட்சார்ச்சனை விநாயக விரதம் 21 நாளும் விசேட அபிஷேகங்கள், சதுர்த்தி அபிஷேகங்கள், புராண படலங்கள் இன்னும் அநேக வைபவங்களைத் தொடக்கி நடாத்தி வந்தார்.

1975ம் ஆண்டு வைகாசி மீ மகாமண்டப, நிருத்த மண்டப வேலைகள் தொடங்கி மிகக்குறுகிய காலத்துள் முடிக்கப்பட்டன. ஆவணி மீ பாலஸ்தானம் செய்து தூபிகள் திருத்தி வர்ணம் வைத்தும், மடைப்பள்ளி சுற்றுமதில் திருத்தி, மின்சார உபகரணங்கள் பொருத்தியும் இராட்சத ஆண்டு தை மீ 23ம் நாள் (06.02.1976 இல்) மகா கும்பாபிஷேகம் நடைபெற்றது.

## தேர்த் திருப்பணி

1929ம் ஆண்டு தொடக்கம் பிரதானமாகத் தேர்த்திருவிழா நடைபெற வேண்டிய சூழ்நிலையேற்பட்டும் சகடையில் சிறிய அளவில் தேர்கட்டி விழா நடத்தப்பட்டு வந்தும் பல பொதுமக்கள் வேண்டுகோளின்படி திரு.அ.பொன்னையா தேசிகர் அவர்களால் திருப்பணி தொடங்கித் தேர்ச்சில்லுகள் அச்சு முதலியன செய்யப்பட்டபின் சில சூழ்ச்சிகளால் கைவிடப்பட்டது. ஆலயங்களிலுள்ள சகடைகளில் தேர்கட்டி விழா நடாத்திவரப்பட்டது. பின் திரு. சின்னத்தம்பி அவர்களால் செய்து கொடுக்கப்பட்ட சப்பரச் சகடையில் சிறிய தேர் கட்டி விழாச் செய்யப்பட்டது.

இதைப் பார்த்து வருந்திய பொதுமக்கள் பலர் அஞ்ஞான்று திருவாபஸ்தராக இருந்த பொன்னையாதேசிகரிடம் முறையிட்டும் வருந்தியும் எம்பெருமானைப் பிரார்த்தித்தும் வந்தனர். இதன் பலனாக இவ்வூர் வாசிகள் பலர் சேர்ந்து திரு.வ. சரவணமுத்து (J.P) அவர்களைத் தலைவராகக் கொண்ட ஓர் தேர்த்திருப்பணிச் சபையை உருவாக்கி பல வருட முயற்சியால் ஓர் அழகிய தேரை உருவாக்கி 1965ம் ஆண்டு வைகாசி மாதம் எம்பெருமான் சர்வோபசாரங்களுடன் பக்தர்கள்

அரகர கோஷங்கள் செய்யத் திருநடனத்தோடு நூதன ரதத்தில் ஆரோகணித்து பக்த கோடிகளுக்குக் கிருபை செய்தார்.

## கேணித் திருப்பணி

ஆலயத் தீர்த்தோற்சவம் உட்பிரகாரத்திலுள்ள திருமஞ்சனக் கிணற்றிலேயே தீர்த்தம் கொடுக்கப்பட்டது. சில வருடங்களுக்கு முன் பலர் விரும்பியும் முயற்சி எடுக்காது விட்டனர். பின் திருமதி தையற்பிள்ளை இராமலிங்கம் என்பவர் கோவில் நிர்வாகஸ்தாரைப் பலமுறை கேட்டபோது இது ஆலயத்துக்கு முன்பே கேணி இருந்தாலும் இதை எம் மூதாதையர் தீர்த்தத்துக்கு உபயோகப்படுத்தாததாலும் பெருமான் திருவுளப்பாங்கின் வண்ணமே செய்யவேண்டுமென்று பூக்கட்டிப் பார்த்து திருவுளப் பாங்கு திருத்தும்படி வந்ததால் முன்னாள் கிராமசபைத் தலைவர் திரு.த. செல்வரத்தினம் அவர்களும் ஊர் வாலிபர்களும் சேர்ந்து நிதி திரட்டியும் சிரமதானமூலம் செய்யக்கூடியவைகளைச் செய்தும் கேணியைத் துப்பரவாக்கி சுவர்களைப் புதிதாகக் கட்டி இளைப்பாறு மண்டபமும் அமைக்கப்பட்டது. முதன் முதலாக 1969ம் ஆண்டு வைகாசி மகோற்சவத்தின் போது கேணியில் தீர்த்த மெடுக்கப்பட்டது.

## ரதாரோகண மண்டபத் திருப்பணி

புதிய தேர் செய்தும் தேரில் சுவாமி ஏறுவதற்கு மண்டமில்லாத குறையை இவ்வூரவர்கள் பலர் சேர்ந்து தலைநகராகிய கொழும்பில் சபையை உருவாக்கி நிதி திரட்டி மண்டபத்தை உருவாக்கி 1971ம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது. இதை விரைவில் நடைபெற திரு.சு.துரைசிங்கம் அவர்களும், திரு.சி.சங்கரப்பிள்ளை அவர்களும் பலவகையில் ஊக்கமெடுத்தனர்.

இவ்வாறு பல திருப்பணிகள், பொதுமக்கள் ஒத்துழைப்போடு மனமுவந்து நிதியும் அளித்ததால் தற்போது ஆலயம் எழில்மிகு தோற்றத்தோடு இருப்பதுடன் வளர்ச்சியடைந்துமிருக்கிறது. இன்னும் வளர்ச்சியடையுமென்பதில் ஐயமில்லை.

## ஆலய விழாக்கள்

இவ்வாலயத்தில் தினமும் 3 காலப் பூசைகள் சிவாக முறைப்படி நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு வருஷப் பிறப்பின் போது சங்கிராந்தி புண்ணிய காலத்தில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெறும். பல பக்தர்கள் வந்து பெருமானுக்குப் புதிய பட்டுவஸ்திரம் சாத்தி அரிச்சனை வழிபாடுகள் செய்விப்பார்கள்.

ஆலய மகோற்சவம் வைகாசி மாதப் பூரணையைத் தீர்த்தமாகக் கொண்டு 10 தினங்கள் விழா நடைபெறும். கொடியேற்றத்தை முதலாகக் கொண்டு ஆரம்பித்து 8ம் நாள் சப்பரத் திருவிழாவும், 9ம் நாள் தேர்த்திருவிழாவும், 10ம் நாள் பகல் தீர்த்த விழாவும், இரவு கொடியிறக்க வைபவமும் நடைபெறும். 7ம் நாள் இவ்வூரவர்கள் சேர்ந்து எழுந்தருளி விநாயகப் பெருமானுக்குச் சாயரட்சைப் பூசையில் அதிகமான அபிஷேகம் செய்விப்பார்கள். இக்காட்சி மிகவும் அழகாக இருப்பதுடன் பக்தி பரவசத்தையூட்டுவதாகவும் அமையும்.

விநாயக சதுர்த்தித் தினத்தில் சங்காபிஷேகம் நடைபெற்று சுவாமி திருவீதியுலா வருவார். நவராத்திரி தினங்களில் மூலமூர்த்திக்கும் மகாலட்சுமி அம்பாளுக்கும் விசேட பூசைகள் நடைபெற்று விஜயதசமியிலன்று மானம்பூ உற்சவம் நடைபெறும். சர்வாலய தீபத்தினத்தன்று தீப தரிசனமும் மறுநாள் தொடக்கம் 21 நாட்கள் வரை விநாயக விரதமும் விநாயகப் பெருமானுக்கு பகல் இரவு ஆகிய இரு காலங்களிலும் விசேட அபிஷேகமும், சோடசோபசார மகா பூசையும் நடைபெறுவதுடன் காலையில் பிள்ளையார் கதை படிக்கப்படும். விநாயகசஷ்டி தினத்தன்று மாலையில் விசேட அபிஷேக ஆராதனைகள் நடைபெற்று பிள்ளையார் கதை படித்துத் திருவிழா நடைபெறும். முதல் நாள் மாலை கஜமுகாசுர சங்காரத்திருவிழா நடைபெறும். தைப்பொங்கல், தைப்பூசம் முதலாய தினங்களில் அபிஷேகமும், திருவிழாவும், மாசி சங்கடகர சதுர்த்தித் தினத்தில் மாலை சங்காபிஷேகமும் நடைபெற்று, சந்திரோதயத்தில் விஷேட பூசை, ஆராதனைகள் நடைபெறும்.

மேலும் ஒவ்வொரு மாத சுக்கிலபக்ஷ சதுர்த்தியில் சாயரட்சை பூசையில் விசேட அபிஷேகமும் உற்சவமும் நடைபெறும். ஆடி மாதச் செவ்வாய்க் கிழமைகள், புரட்டாதிச் சனிக்கிழமைகள், ஐப்பசி வெள்ளிக்கிழமைகள், ஆவணி ஞாயிற்றுக்கிழமைகள், தீபாவளி முதலிய காலங்களில் விசேட பூசைகள் நடைபெறும். அநேக அடியார்கள் சுவாமி தரிசனம் செய்வார்கள்.

சிவராத்திரி, திருவெம்பாவை முதலிய காலங்களில் மூல மூர்த்திக்கும் சிதம்பரரேஸ்வரப் பெருமானுக்கும் உரிய விதிப்படி ஆராதனைகள் நடைபெறும்.

தண்டாயுதபாணிக்கு சுக்கிர வாரந்தோறும் ஸ்கந்தசட்டி, குமாராலய தீபம் முதலிய காலங்களில் விசேட பூசையும் மகா லட்சுமிக்கு நவராத்திரி, வரலட்சுமி விரதம் முதலிய தினங்களிலும், சனீஸ்வரனுக்குப் புரட்டாதி மாதத்துச் சனிக்கிழமை தோறும் விசேட ஆராதனைகள் நடைபெறும்.

1976ம் ஆண்டு ஜீர்ணோதாரண ரக்ஷபந்தன அட்டபந்தன புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் எவ்வளவு குறுகிய கால இடைவெளியில் நடைபெற்றதோ அவ்வளவு குறுகிய காலத்தில் 02.12.1976ம் ஆண்டு ஓர் இறுதி விருப் பாவணத்தை விட்டு அம்பலவாணக் குருக்கள் அவர்கள் அமரத்துவமானார்.

அமரர் அவர்களின் இறுதி விருப்புக்கு இணங்க அன்று தொடக்கம் மேற்படி ஆலயத்துக்கும் அவரால் சாதனம் செய்யப்படாத சொத்துக்களுக்கும் உரித்தாள ரானேன். குறித்த மரணசாதனம் உண்மையானதென நிரூபிக்கப்பட்டு 13.10.1977 இல் ஸ்ரீலங்கா குடியரசின் பொது நம்பிக்கை பொறுப்பாளரால் சிவஸ்ரீ சு.சிவஷண்முகானந்தக் குருக்கள் அவர்களை நிறைவேற்றுனராகவும் உரித்தாள ராகவும் நியமித்து அன்னாரால் விட்டுச் சென்ற சொத்துக்களும் அவரிடம் கையளிக்கப்பட்டன.

பல புனருத்தாரணப் பணிகளைச் செய்தும் பூசைகள் திருவிழாக்களைச் செய்தும் வந்து 1988ம் ஆண்டு புனராவர்த்தன மகா கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. 1991 பெப்ரவரி 6ம் நாள் நாட்டின் வன்செயலால் - விமானக் குண்டுவீச்சினால் ஆலயம் சேதமடைந்தது. முன்னும் பின்னும் ஷெல் வீச்சினாலும் சேதமானது. 10.06.1992ல் படையினர் பிரவேசிக்க பூசைகள் ஸ்தம்பித்தது. 13.04.1997ல் அதி உத்தம ஜனாதிபதி திருமதி. சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா அவர்களின் பணிப்புரையின் படி காங்கேசன்துறை கட்டளைத் தளபதியின் அனுமதியுடன் உயர்பாதுகாப்பு வலயமாதலால் படையினரின் பாதுகாப்புடன் சென்று பூசைகள் திருவிழாக்கள் செய்யப்பட்டு வந்தன.

**அமரர் சிவஸ்ரீ சுப்பிரமணிய ஐயர் சிவஷண்முகானந்தக்குருக்கள்**
**அவர்களால் சில ஆண்டுகளுக்கு முன்பு எழுதப்பெற்ற**
**இவ்வரலாறு இங்கு மீள் பிரசுரமாகிறது.**



அமரர் சிவஸ்ரீ. சுப்பிரமணியஐயர் சிவஷண்முகானந்தக் குருக்கள்
(ஆலய இணைத் தர்மகர்த்தா)



# வாழ்வு மிகுத்து வரும் !

உலகின் வினையகற்றி ஆள்பவர் நம் விநாயகர்.
நம் சைவத்தில் கணபதி வணக்கமே முதல் வணக்கமாம்.
எக்காரியம் செய்யப்புகுவாரும்,
விநாயகரை வணங்கியே,
தம் வினைகளை ஆரம்பிக்கவேண்டுமென்பது சைவமரபு.
முப்புரம் எரிக்க இரதமேறிய சிவனார்,
கணபதியைக் கைதொழாமற் புறப்பட்டதால்,
அவர் இரதத்தின் அச்சு முறிந்ததாய்ப் புராணம் உரைக்கும்.
**முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்**
**அச்சது பொடிசெய்து அதிதீரா**
பின்னர் கணபதியை வழிபட்ட பின்பே,
சிவனார் முப்புரம் எரித்தனராம்.
சைவத்தின் மூல தெய்வமாகிய,
சிவனார் முப்புரம் எரித்தனராம்
சைவத்தின் மூல தெய்வமாகிய,
சிவனாலும் வழிபடப்படும் தகுதி,
நம் கணபதிக்குரியது.

*  *  *

முப்பத்தாறு தத்துவங்களில்,
முதல் ஐந்தாய் அமைந்த,
நாதம், விந்து, ஈஸ்வரம், சதாசிவம், சுத்த வித்தை எனும்,
ஐந்து தத்துவங்களும் சிவ தத்துவங்களாம்.
இவற்றுள் நாதம் சிவத்தையும்,
விந்து சக்தியையும் குறிப்பன.
இந் நாதவிந்துவினுடைய சேர்க்கையே பிரணவமாம்.
இப்பிரணவத்தின் வடிவமே நம் கணபதி வடிவமாம்.

*  *  *

மூல தத்துவங்கள் இரண்டினது,
இணைப்பால் அமைந்ததாற்தான்,
முதல் வணக்கம் கணபதிக்குரியதாயிற்று.

நாத தத்துவத்திற்குக் குறியீடு -
விந்து தத்துவத்தின் குறியீடு O
இவ்விரு குறியீடுகளும் சேர வருவதே,
(உ) உகாரமாம்.
அதனாலேயே,
அப்பிரணவ வடிவான கணபதியைக் குறிக்க,
பிள்ளையார் சுழி எனும் பெயரில் உகரம் இடப்படுகின்றது.
நம் கணபதியின் துதிக்கை இவ்வடிவானது.

*      *      *

இங்ஙனம் தத்துவ நிலையில்உயர்ந்து நின்று,
முதல் வணக்கம் பெற்று போற்றப்படும் கணபதி,
எளியாருக்கு எளியராயும் நிற்கிறார்.
கணபதியை எவரும் எங்கும் எப்படியும் தொழலாம்.
கிரியைகளை வகை செய்யும் நம் ஆகமங்களும்,
கணபதி வழிபாட்டிற்கான கட்டுப்பாடுகளை விதித்தில.
சாதராரண மரத்தின் கீழும் ,
கணபதியை ஸ்தாபிக்க முடியுமாம்.
ஆச்சாரம் முதலானவை அனுஷ்டிக்கப்படாலும்,
கணபதி வணக்கத்தை இயற்ற அனுமதியுண்டு.

*      *      *

இவ் உலகப்பொருட்களை,
உயிரில் பொருள், உயிருள் பொருள் என,
இரு வகையாய்ப் பிரிக்கலாம்.
இவையே சடம், சித்து எனப்படுகின்றன.
அப்பிரிப்புக்கு அவற்றின் அறிவே அளவுகோலாம்.
ஓரறிவிலிருந்து ஆறறிவுவரை பிரிவுபட்டதால்,
உயிர்ப்பொருட்களின் வகை ஆறாயிற்று.
இவ் அறுவகை உயிர்களுள்,
ஆறறிவு பெற்ற மனிதன் முதல்நிலையையும்,
ஓரறிவு பெற்ற தாவரங்கள் கடைநிலையையும் பெறுகின்றன.
அவ் ஓரறிவு பெற்ற தாவரங்களுள்,
மிகத் தாழ்ந்தது புல்லாம்.
உயிர் இல் பொருட்களாகிய சடப்பொருட்களுள்,
மிக இழிவாய்க் கருதப்படுவது மலமேயாம்.

*      *      *

உயிர், சடப்பொருள்களில்,
இழிநிலையுற்றவைகளான புல்லையும், மலத்தையும் சேர்த்தே,
கணபதியை ஆவாகனம் செய்யமுடியும்.
பசுவின் மலத்தையும், அறுகம்புல்லையும் ஒன்று சேர்த்து,
கணபதி என வழிபடுவது நம் வழக்கம்.
நம் கணபதியின் எளிமை நிலைக்கு,
இவ்வழிபாடு தக்க சான்றாகிறது.
இதனால்,
சமூகத்தின் மிகக் கீழ் நிலையுற்ற ஒருவரும் கூட,
நம் கணபதியை,
எளிமை பட வழிபடலாம் எனும் உண்மை அறிகிறோம்.

* * *

உயர்வினும் உயர்ந்து நின்றும்,
தாழ்வினும் தாழ்ந்து நின்றும்,
அருள் செய்யும் ஐங்கரன் தன் கருணை மிகப்பெரிதாம்.
வேழ முகத்து விநாயகனை,
மனம், மொழி, மெய்களால் வணங்க,
வாழ்வு மிகுத்து வருமாம்.

* * *

கம்பவாரிதி
*இ. ஜெயராஜ்*

# உலகை வலம்வந்த விநாயகர்



இந்துமதத்திற்குரிய கடவுளருள் மிக்க முதன்மைச்சிறப்புடையவர் விநாயகர் எனலாம். முன்னவனே யானை முகத்தவனே என இராமலிங்க அடிகள் குறிப்பிடுவது நோக்குதற்குரியதாகும். அம்மை அப்பனையே அகிலாமாகக்கண்டு அவர்களைச் சுற்றியே மாங்கனிபெற்றதை விநாயகரின் தெய்வீக வரலாற்றுக் கதைகள் குறிப்பிடுகின்றன. தாய் தந்தையரையே தரணியாக கணபதி கண்ட போதிலும் "உலகை வலம் வந்த விநாயகர்" எனத்தக்க வகையில் விநாயகர் வழிபாடானது உலகளாவிய ரீதியில் காணப்படுகின்றது.

விநாயகர் இந்துமதத்தில் மட்டுமன்றி பௌத்தம், சமணம் ஆகிய மதங்களிலும் சிறப்பாகப் போற்றி வழிபடப்படுகின்றார். இந்து பௌத்த இணைப்புப் பாலமாக விநாயகர் விளங்குகின்றார். இவரது வழிபாடு இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் மட்டுமேயன்றி சிங்கப்பூர், பர்மா, சயாம், சம்பா, கம்போடியா, ஜாவா, பாலி, போர்னியோ, சீனா, ஜப்பான், நேபாளம், திபெத்து, கொரியா முதலிய நாடுகளிலும் சிறப்புற நிகழ்கின்றது. அமெரிக்கா நாட்டில் பெரு, மெச்சிக்கோ முதலிய பகுதிகளிலும் விநாயகர் வழிபாடு இருந்தமைக்குரிய சான்றுகள் பல காணப்படுகின்றன.

மேல் பர்மாவில் மகாயான பௌத்த மதம் நிலவிய இடங்களிலெல்லாம் விநாயகர் வழிபாட்டினைக் காண முடிகின்றது. விநாயகரைப் பௌத்தக் கோயிலுக்குள் வைத்து "மகாபின்னே" என்ற பெயரால் மேல் பர்மா மக்கள் பூசிக்கின்றனர்.

சியாம் நாட்டில் உள்ள பௌத்தர்கள் மத்தியிலும் விநாயகர் வழிபாடு சிறப்புற்று விளங்குகிறது. அவர்கள் விநாயகருக்கு கோயில்களினுள்ளே இருக்க இடம் அளிக்காவிடினும் கோயிற் பிரகாரங்களில் விநாயகரை வைத்து வழிபடுகின்றனர்.

சைவமதம் தழைத்திருந்த சம்பா, கம்போடியா போன்ற இடங்களில் விநாயகர் வழிபாடு உன்னத நிலையில் காணப்பட்டது. கி.பி.நான்காம் நூற்றாண்டிலிருந்து விநாயகரின் திருவுருவங்கள் அகப்படுகின்றன. இந்தோசீனாவில் அகப்படும் கல்வெட்டுக்கள், விநாயகர் பல கடவுளர்களுடன்

இருக்கும் போது கணேசர் என்றும் லிங்கரூபத்திலுள்ள பரமசிவனுடன் காணப்படும்போது "திருவிநாயகர்" என்றும் குறிப்பிடுகின்றன. கி.பி. ஒன்பதாம் நூற்றண்டின் கல்வெட்டொன்று சந்தனகிரி கணேசர் என ஒரு கணபதியைக் குறிப்பிடுகின்றது.

இந்தியாவில் உள்ள "மலைக்கோட்டைக் கணபதி"யைப் போல் இங்கும் விநாயகர் வணக்கம் இருந்திருக்க வேண்டுமெனலாம்.

ஜாவாத்தீவில் பழங்காலத்தில் சைவம், வைணவம், பௌத்தம் ஆகிய சமயங்கள் மிகுதியாகப் பரவியிருந்தன. கி.பி 13ம் நூற்றாண்டு முதல் இஸ்லாமிய மதமே அங்கு பெரிதும் தலையெடுத்தோங்கியது. எனினும் அங்கே விநாயகரின் செல்வாக்கு சிறிதும் குன்றாமல் நிலவிவருகின்றது.

ஜாவாவில் கணேசர் விக்னேஸ்வரராகக் கருதப்பட்டார். ஆறுகளைக் கடக்கும் இடங்கள் செங்குத்தான மலைச்சாரல்கள் போன்ற அபாயகரமான இடங்களில் விநாயகருடைய உருவங்கள் காணப்படுகின்றன. மண்டை ஓடுகளினால் ஆக்கப்பட்ட ஆபரணங்களை விநாயகருக்கு அணிகலன்களாக அணியும் வழக்கத்தை இந்த நாட்டில் தான் காணலாம்.

பாலித்தீவில் கி.பி.8ம், 9ம் நூற்றாண்டுகளில் சைவசமயம் பிரபல்யம் பெற்று விளங்கியது. சிவனுடன் துர்க்கை, விநாயகர், நந்தி என்ற மூவரும் கூடிய சிற்பங்களே மிக அதிகமாக பாலித்தீவில் காணப்படுகின்றன. இம்மாதிரிக் காட்டப்படும்போது விநாயகர் லிங்க உருவத்திலேயே அநேகமாகக் காணப் படுவதும் கவனிக்கத்தக்கது. விநாயகர் இங்கு துவாரபாலகராகவும் காணப் படுகின்றார்.

போர்னியாவில் கி.பி.5ம் நூற்றாண்டில் சைவசமயம் சிறந்து விளங்கியதாகக் கல்வெட்டுக்களிலிருந்து அறியமுடிகின்றது. மடிந்த கால்களின் உள்ளங்கால்கள் ஒன்றையொன்று தொடும்படி உட்கார்ந்த நிலையில் இங்குள்ள விநாயகரின் உருவங்கள் காணப்படுகின்றன.

சிங்கப்பூரில் விநாயகர் வழிபாட்டிற்குரிய திருத்தலமாக ஸ்ரீ செண்பக விநாயகர் ஆலயம் விளங்குகின்றது. 1850களில் செண்பக மரத்தடியில் ஒரு விநாயகரின் சிலை கண்டெடுக்கப்பட்டது. அதிலிருந்து தோன்றி வளர்ச்சி கண்டுள்ள திருத்தலமாக இவ்வாலயம் திகழ்கின்றது.

சீனாவில் கி.பி.531ம் ஆண்டுக்குரிய கல்வெட்டைக் கொண்ட யானை முகக் கடவுளின் சிற்பவடிவம் ஒன்று உள்ளது. ஆனால் ஜப்பானில் ஒன்பதாம் நூற்றாண்டுக்குப் பிறகே இவர் தெரியவந்துள்ளார். இந்த இரண்டு தேசங்களிலும் விநாயகர் இரண்டு கைகளுடன் காணப்படுகின்றார். இரண்டு விநாயகர்கள் நிற்கும் நிலையில் காணப்படின் அப்போது ஒருவர் மற்றொருவரைப் பார்ப்பது போலவும் காட்சி தருகிறார். இம்மாதிரியான இரு வடிவங்கள் சீனா, ஜப்பான் தவிர வேறு எங்குமே கிடையாது. இவ்விடங்களில் விநாயகர் வழிபாடு மந்திர, தந்திர முறைகளில் நடைபெறுகின்றது. இதனால் "அவலோகித ஈஸ்வர போதி சத்வர்" மாதிரி விநாயகரும் சீனாவிலும், ஜப்பானிலும் எல்லோருக்கும் தெரியவந்துள்ளார். நாளடைவில் போதிசத்துவருடன் இவரையும் சேர்த்தனர். சீனாவிலும், ஜப்பானிலும் எல்லோருக்கும் தெரியவந்துள்ளார். நாளடைவில் போதிசத்துவருடன் இவரையும் சேர்த்தனர். சீனாவிலும் ஜப்பானிலும் விநாயகர் இருவகையாக அமைக்கப் படுகின்றார். முதலாவது தனி வடிவமாகவும் இரண்டாவதில் இருவடிவமாகவும் அமைவது குறிப்பிடத்தக்கது. ஜப்பானிய மக்கள் விநாயகரை "Kon Kitten" என வழங்குகின்றனர்.

நேபாளத்தில், அசோகச் சக்கரவர்த்தியின் குமாரி விநாயகருக்கு ஒரு கோயில் எடுப்பித்ததாகக் கூறப்படுகின்றது. கி.பி.10ம், 11ம் நூற்றாண்டுகளில் இங்கு விநாயகர் வழிபாடு பிரபல்யம் பெற்று விளங்கியது. விநாயகர் பௌத்த கடவுளாக, நர்த்தன கணபதியாக நேபாளத்திலும், திபேத்திலும் தெரியவந்துள்ளார். சாதாரணமாக பன்னிரண்டு கைகளுடனும், எலி வாகனத்தின் மீது நடனமாடுவது போலவும் காணப்படுகின்றார். நேபாளத்தில் மகாயான பௌத்தரிடையே விநாயகர் சிங்கத்தில் அமர்ந்தவராக ஹேரம்ப விநாயகராக விளங்குகின்றார். இவை தவிர ஒரு யானைத் தலையுடனும் மூன்று கண்களுடனும் உட்கார்ந்தோ அல்லது நின்ற மாதிரியாகவோ விளங்கும் அவரின் உருவங்களும் நேபாளத்தில் காணப் படுகின்றன. நேபாளத்திலும் இந்தோசைனாவிலும் நான்கு முகங்களை உடைய விநாயகர் திருவுருவங்கள் அதிகம் காணப்படுகின்றன.

ஆப்கானிஸ்தானில் மிகப் பழமை வாய்ந்த விநாயகர் திருவுருவங்கள் இரண்டு தொல் பொருள் ஆராய்ச்சி அறிஞர்களால் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

தென்அமெரிக்காவிலும் இந்துப்பண்பாட்டுப் பாரம்பரியங்கள் பரவியதாகக் கூறப்படுகின்றதுன. இந்துத் தெய்வங்கள் பல அங்கே வழிபடப்படினும் முக்கியமாக இந்திர – கணேசரின் வழிபாடு சிறப்பிடம் பெறுகின்றது.

மேற்கு திபேத்தில் பல விநாயக வடிவங்கள் காணப்படுகின்றன. இவர் துஷ்ட தேவதைகளை அடக்கிக் காப்பாற்றுகின்றவராக கருதப்பட்டு வீட்டு வாசற் படிகளுக்கு மேல் வைக்கப்பட்டுள்ளார்.

விநாயகர் பல இடங்களில் துவாரபாலகராக வணங்கப்படுவதையும் அவதானிக்க முடிகிறது. வட இந்தியாவிலும், சீனாவிலும், துருக்கிஸ்தானிலும் விநாயகர் துவாரபாலகராக் காட்டப்பவில்லை. விநாயகர் மகாயான பௌத்தக் கோயில்களுள்ள வட ஆசிய பாகத்தில் மிகவும் வணங்கப்பட்டார்.

பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் ஐந்து முகங்களுடனும் பத்துக் கரங்களுடனும் "மகாராஜ லீலாசனம்" என்னும் நிலையில் தாமரை மலரை ஏந்திய இடக்கையை உடைய வல்லபை என்னும் சக்தியைத் தமது இடப்பக்கத் தொடையில் அமரச் செய்து தழுவிக் கொண்டுள்ள ஏரம்ப கணபதியின் திருவுருவம் காணப்படுகின்றது.

வட இந்தியாவில் குப்தர் கலை மரபைப் புலப்படுத்தும் விநாயகர் வடிவம் பூமார என்ற இடத்தில் கிடைத்துள்ளது.

விநாயகருக்கு மூஷிகம் என்னும் பெருச்சாளியே வாகனமாகும். ஆயினும் சிங்கமும் அவருக்கு வாகனமாகக் கூறப்பட்டுள்ளது. சிங்கத்தின் மீது அமர்ந்து கொண்டு ஐந்து தலைகளுடன் கூடிய பஞ்சமுக சிநாயகர் திருவொற்றியூர்த் தியாகேசுவரர் கோயிலிலும், நாகபட்டினம் காயாசோகணேசுவரர் கோயிலிலும் எழுந்தருளியுள்ளார். திருவொற்றியூரில் ஐந்துதலைகளும் ஒரே வரிசையில் உள்ளன. நாகபட்டினத்தில் நான்கு திசைகளிலும் நான்கு தலைகளும் மேலே ஒரு தலையும் உள்ளது.

விநாயகர் திருவுருவங்களில் பொதுவாக துதிக்கையானது இடப்புறமாகவே இருக்கும். ஆனால் திருவலஞ்சுழி என்னும் தேவாரப் பாடல் பெற்ற தலத்தில் வலப்புறமாகச் சுழித்துள்ள தும்பிக்கையுடன் கூடிய வலம்புரி விநாயகர் திருவுருவம் காணப்படுகின்றது.

தமிழகத்தில் விநாயகர் வணக்கம் சதுக்கப்பூதத்திலிருந்து தோன்றிய தென்றும் புத்தமத வழிபாட்டினின்று தோன்றி வேழமுகத்தான் தமிழக உழவர்களின் தெய்வமெனவும், புத்தருக்குக் கட்டப்பட்ட கோயில்களனைத்தும் தமிழகத்தில் விநாயகர் கோயில்களாக மாறினவென்றும், யானைகள் மிகுந்த பண்டைத் தமிழ்நாட்டில் விளங்கின வழிபாட்டின் அடிப்படையில் விநாயகர்

வணக்கம் தோன்றியதென்றும் தமிழக அறிஞர்கள் குறிப்பிட்டுள்ளனர். தமிழகத்தில் தும்பிக்கை ஆழ்வார் என்ற பெயரில் வைணவத் திருத்தலங்களில் விநாயகர் வழிப்படப்படுகின்றார்.

ஜேனஸ் (Jenus) என்னும் உரோமக் கடவுளுக்கும், துவிமுககணபதி வடிவத்திற்கும் நெருங்கிய ஒற்றுமை உண்டு. மேலும் கூத்தாடுகின்ற நர்த்தன கணபதிக்கும் நடனமாடுகின்ற தயோனிசஸ் ( Dienysus) என்னும் அயோனியக் கடவுளுக்கும் இடையேயும் ஒற்றுமைகள் காணப்படுகின்றன.

இலங்கையில் இந்துக்கள் மத்தியில் மட்டுமன்றி பௌத்தர்கள் மத்தியிலும் விநாயகர் வழிபாடு நடைபெறுகின்றது. கி.மு.இரண்டு தொடக்கம் கி.பி.முதலாம் நூற்றாண்டுக்குரியவை எனக் கூறப்படும் விநாயகரின் சிற்பம் பௌத்த வழிபாட்டுத் தலமான மிஹிந்தலையில் காணப் படுவதனை பேராசிரியர் பரணவிதான போன்றவர்கள் குறிப்பிட்டுள்ளனர். மேலும் பொலநறுவையில் கிடைத்த வெண்கல விநாயகர்சிலை, திருகோணமலையில் கிடைத்த விநாயகர் சிலை ஆகியன இலங்கையில் நிலவிய விநாயகர் வழிபாட்டின் புராதனத்தை அறிய உதவுகின்றன. இலங்கையில் முறிகண்டிப் பிள்ளையார், கற்பக விநாயகர், முத்து விநாயகர், செல்வ விநாயகர்,வீரகத்தி விநாயகர் எனப் பல்வேறு பெயர்களில் விநாயகர் வழிபாடு சிறப்பாக நடைபெறுகின்றது. இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து மேலைநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்கள் தாம் வதியும் லண்டன், கனடா, சுவிஸ்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி, ஆஸ்ரேலியா, டென்மார்க் முதலிய நாடுகளில் விநாயகருக்குக் கோயிலமைத்து வழிபாடாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இவ்வாறு தொகுத்து நோக்குகின்ற போது உலகை வலம் வந்த விநாயகர் எனக் கூறத்தக்க வகையில் விநாயகர் வழிபாடானது பாரெங்கும் பரந்து விளங்குவது நோக்குதற்கரியதாகும்.

*பேராசிரியர் டாக்டர் மா. வேதநாதன்*
தலைவர், இந்துநாகரிகத் துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

உ
சிவமயம்

# தெல்லிப்பழை – மாவிட்டபுரம் – கொல்லங்கலட்டி
# கேணிக்கரை வீரகத்தி விநாயகர்
# திருவூஞ்சல்



### காப்பு

சொல்லுமறை யந்தணர்வே ளாள ராதித்
தொல்குடியும் பல்வளமும் துதைந்தே யோங்கும்
தெல்லிநகர் மாவை கொல்லங் கலட்டி கேணித்
திருக்கரைவா ழொருந்தண்முகச் செல்வா வுன்றன்
செல்லவழி யற்புதத் தமுதலின்பச்
செழுந் தமிழா லூஞ்சலிசை தெளிந்து பாடக்
கல்விதரு மோங்கார வடிவா முன்றன்
கற்பகஞ்சேர் பொற்பதங்கள் காப்ப தாமே.

### நூல்

ஒளிமருவு நாதவிந்து தூணா நாட்டி
உரைமருவு மிருமொழியும் விட்டம் பூட்டி
தெளிமருவு சிலகலைநூல் வடங்கள் மாட்டி
சிவமருவு மோங்கார பீடங் கூட்டி
மொழிமருவு மந்திர தோரணங்கள் நீட்டி
முதமருவ லியற்றிய பொன்னூஞ்சல் மீதே
வெளிமருவு பொழிற் கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீருஞ்சல் 01

விண்பயிலும் ஒண்சுடர்கள் குடைகள் தாங்க
வெளிபயிலும் வளிவேந்தர் கவரி வாங்க
தண்பயிலும் புனலரசன் பனி நீர் தூவ
தார்பயிலுங் கொடிநிரைக ளமரர் காவ
எண்பயிலும் மலரயானா ராசி பேச
இணம் பயிலும் விரைமலர்கள் முனிவர் வீச
மின்பயிலும் பொழிற்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 02

ஏழாளு மிசை முனிமா டகயாழ் மீட்ட
எழிலாளும் தொழின்முழவு நெடுமால் கூட்ட
தாளாளும் தமிழ் முனிவன் தாளம் போட
சதியாளும் பூதகண நாத ராட
கோளாளும் பழவடியார் வினைக ளோட
களியாளும் மொழிமடவார் வடந்தொட் டாட்ட
வேளாளர் பயில் கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 03

திங்களணி செஞ்சடையும் செம்பொற் கொம்பும்
செம்மையணி மணிமார்பும் திருமுன் னூலும்
கொங்கலரும் கொன்றையணி குலவுந் தோளும்
குடவயிறும் விகடநடங் கொண்ட தாளும்
ஐங்கரமும் நால்வாயும் மூன்று கண்ணும்
அம்மையிடப் பாகமுமா யாகு வேறி
வெங்கலிதீர்க் குங்கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 04

மந்திநீர் பாலிளநீர் மணிநீ ராட்டி
மான்மதஞ்சந் தனம் பளிதம் மலியக் கூட்டி
சுந்தரப்பூம் பட்டுடுத்திக் கலன்கள் பூட்டித்
தூயமணி மாலை தொடைமாலை சூட்டிக்
கந்தநறும் புகையெடுத்து விளக்கங் காட்டிக்
கழல்பரவு மடியாரிடர் கழிய வோட்டி
வெந்துயரம் விட்டு கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 05

பருப்பு நறும் சருக்கரையும் பாலுந் தேனும்
பாசவலுந் தினையிடியம் பழமும் பாகும்
கருப்புமுறி முறுக்குவடை கண்டும் சுண்டும்
கடலைபொரி மோதகமு மடையுங் காயும்
திருப்பொலி புத் தமுதுமிளந் தெங்கின் காயும்
சீரடியார் தந்துமந் திரத்தாற் போற்ற
விருப் பொடருள் புரி கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 06

சுந்தரப் பொன் முடியாடச் சுடிகையாட
தூயசடை மதியாட நதியு மாட
வந்துமுறச் செவியாட மகிழ்வு மாட
மாணிக்க வடமாட மதாணி யாட
முந்துகுட வயிறாட முன் நூலாட
முழு துலகுங் களியாட நடனமாடும்
வெந்துயரம் விட்டுக் கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 07

ஓதவிந்து நாதமுற வுதித்தா யென்றும்
ஓங்கார மூலமறை விதித்தா யென்றும்
மோதகமுங் கோடுமணிக் கையா வென்றும்
மூவதமங் கல ஞான மெய்யா வென்றும்
வேதபரி புர கமல பாதா வென்றும்
விக்கினங்கள் தீர்த்தருளுந் நாதா வென்றும்
மேதையர்கள் துதி கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 08

கரிமுகனைக் கொன்றமரர் கணத்தைக் காத்தாய்
காகுத்தன் கொலைப்பழியை கணத்திற் றீர்த்தாய்
திரிபுரத்தை யெரிக்கவரு தேரைப் பேர்த்தாய்
தினைக்குரவர் மலர்க்கொடியைச் சேய்க்குச் சேர்த்தாய்
புரிநெகிழா விருவினையும் போகப் பார்த்தாய்
புனல் கவிழ்ந்துப் புருகூதர்க் கருணை கூர்ந்தாய்
விரிமலர்ப்பூம் பொழிற் கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 09

வரதகர வபயகுட வகட கும்ப
மதவறுகு முகசுமுக வரவே ரம்ப
பரத நட கமல பத நிமல போத
பரம சுக வமுத நித மருளு நாத
புரதகன னரிய சுத விமல வேக
பூரண புண் ணிய புனித புராண யோக
விரத தவ மலி கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே யாடீரூஞ்சல் 10

மதி மலி செஞ் சடையீ ராடீரூஞ்சல்
வஞ்சமலி செஞ்சடையீ ராடீரூஞ்சல்
துதிமலி போதக முவந்தி ராடீரூஞ்சல்
சுவைமலி மோதகமுவந்தீ ராடீரூஞ்சல்
கதிமலியும் சலமுடித்தீ ராடீரூஞ்சல்
கறைமலி சஞ்சல முடித்தீ ராடீரூஞ்சல்
விதியடியர் துதி கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரே ராடீரூஞ்சல் 11

## வாழி

ஆவாழி யருள்வழி யறங்கள் வாழி
அருந்தமிழும் பழமறையா கமும் வாழி
பூவாழி பொன்னின்மழை பொழிந்து வாழி
பூதிகண்டிகை யைந்தெழுத்தும் பொலிந்துவாழி
தேவாழி மாவைநகர்ச் செவ்வேள் வாழி
செந்தமிழி நூஞ்சலிசை சிறந்து வாழி
மேவார்க்கும் மருள் கொல்லங் கலட்டி மேவும்
வீரகத்தி விநாயகரும் வாழி வாழி.

## எச்சரிக்கை

திங்கள் ஒளிர் வான முடை தேவா எச்சரிக்கை
திகழார் நுதல் நயனமுடை திருவே எச்சரிக்கை
பந்தமொடு பாசவினை யறுப்பாய் எச்சரிக்கை
பக்தர்கருள் கேணிக்கரை நாதா எச்சரிக்கை
திருமாலவன் மருகன் எனத் திகழ்ந்தாய் எச்சரிக்கை
உமையாளவள்மைந்தன்எனத்தெளிந்தோம் எச்சரிக்கை
திருப்பொலிவு காட்டியருள் ஈசா எச்சரிக்கை
கொல்லங்கலட்டியுறை நாதா எச்சரிக்கை.

## பராக்கு

தந்திமுக வைந்துகர நாதா பராக்கு
தம்பி முருகனுக்கருள் தேவா பராக்கு
பந்தவினை யகற்றும் பாலா பராக்கு
பக்தர்கருள் கேணிக்கரை நாதா பராக்கு
மந்திரமும் தந்திரமும் ஆனாய் பராக்கு
மறந்தவர்கும் கருள்புரியும் தேனாய் பராக்கு
தந்தமொடு ஐந்துகரங் கொண்டாய் பராக்கு
கொல்லங்கலட்டியுறை விநாயகா பராக்கு.

## மங்களம்

சக்தி உமை மைந்தனுக்கு மங்களம்
சங்கரனின் புதல்வனுக்கும் மங்களம்
சித்தி புத்தி நாயகர்க்கு மங்களம்
சித்தமெல்லாம் நிறைந்தவர்க்கு மங்களம்
நித்தியமாய் நின்றவனே மங்களம்
நித்தம் எமைக்காப்பவனே மங்களம்
பக்தியுடன் போற்றுகின்றோம் மங்களம்
வீரகத்தி விநாயகரே மங்களம்.

நவாலியூர்
***திரு.க. சோமசுந்தரப்புலவர் பாடியது.***

# சித்திரத் தேர் வெள்ளோட்டம் சிறந்திடவே அருள்வாய்

சீர்மல்கு கொல்லங் கலட்டியுறை ஐங்கரனின்
சிறப்பெல்லாம் கனிந்துதோன்ற
சித்திர மணித்தேர் தந்ததிறம் தானுமே
எண்திசையும் ஓங்கியொளிர
நேர்விளக்கு வல்லிதன் குன்மபிணி தன்வடுக்கள்
தானுமே மாறிமறைய
நிறைந்தருள் நல்கும்கொல் லங்கலட்டி மேவிய
வீரகத்தி விநாயகர்தன்
கூர்மைசேர் திருவருட் செல்வமே நிறைந்திட
குளிர்ந்தருள் பொழிந்துவருளும்
கூத்தனின் திருமகன் எனவிளங்கும் ஐங்கரனே
குன்றாவுன் அருளோங்கவே
ஊர்மகிழச் செய்தேரின் வெள்ளோட்டம் சிறந்திடவே
உந்தனருள் ஒளிகாட்டியே
உளங்குளிர வின்னருள் பொழிந்தெமை ஆண்டருளும்
உமைமகிழும் கணநாதனே.

ஆண்டுபல வாகவே அல்லலுற் றாடிய
அவலங்கள் மறைந்தோடவே
அகதியாய் வாடிய துயர்களும் அறுந்திட
அற்புத ஒளிகூட்டியே
எண்ணுவார் தன்னெஞ்சில் எழில்நடனம் புரிந்தருளும்
ஏற்றமே மிகவும்கூட்டி
எம்மவர் வாழ்விடம் தனைக்காட்டி வைத்ததிறம்
என்றென்றும் இசைபாடவே
கண்ணுக் கினிமைதரு சோலைநிறை நல்லூராம்
கொல்லங் கலட்டிதன்னில்
களிநடனம் புரிந்தெம்மைக் காத்தருளும் கரிமுகனே
கன்னிதுயர் தீர்த்தாண்டவா
மண்மகிழ உந்தனருள் மாட்சியே காட்டியெங்கள்
மனமெல்லாம் குளிர்ந்துவணங்க
மாண்புமலர் சித்திரத்தேர் வெள்ளோட்டம் சிறந்திடவே
நின்னருள் காட்டியருள்வாய்.

கவியாக்கம்
***சு. குகதேவன்***
கொல்லங்கலட்டி


மாவை - கொல்லங்கலட்டி தேனிக்கரை
வீரகத்தி விநாயகர் தேவஸ்தானம் - ஸ்ரீமத் சிதம்பரேஸ்வரர் திருக்கோயில்
சித்திரத் தேர் வெள்ளோட்ட விழா - 24.01.2016, காலை: 10.00 மணி
(ஸ்ரீ மன்மத வருஷம் தைத்திங்கள் பத்தாம் நாள் ஞாயிற்றுக்கிழமை தைப்பூசத் திருநாள்)
மாவேறு பவளத்தால்
கால்களாக்கி
மணிவைர ரத்தினத்தால்
விட்டம் பூட்டி
பூமேவு தங்கமணிப்
பலகை தேக்கி
பூவேறு சித்திரங்கள்
பொழியச் செய்த
சித்திரத்தேர்
வெள்ளோட்ட விழா
யாழ்ப்பாணத்தின்
தண்பொழில் சேர் மாவை
கொல்லங்கலட்டிப் பதியினிலே
சோழநாட்டு இராசகுமாரியான
மாருதப்புரவீகவல்லியால்
பிரதிஷ்டை செய்யப்பெற்றதான
வரலாற்றுச் சிறப்பு மிக்க
வீரகத்தி விநாயகருக்குச்
சித்திரத்தேர்
வெள்ளோட்ட விழா
24.01.2016
காலை: 10.00 மணி
24.01.2016
காலை: 10.00 மணி